1970 மார்ச் 26]

திரை அரங்குகளில் புகைப் பிடித்தல்

* 551 வினு—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திரை அரங்குகளில் (Auditorium) 'புகைப்பிடித்தல்' தொடர்பான சட்டத்தை நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடித்தல் தொடர்பான சட்டத்தை நீக்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை,

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, திரை அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்பதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ? ரயிலில் பிரயாணம் செய்கிறபோது, உடன் இருக்கும் பயணிகள் ஆட்சேபணை செய்யவில்லையென்றால், புகை பிடிக்கலாம் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறதே, அதேபோல் திரைப்பட அரங்குகளிலும் அதை அமலுக்குக் கொண்டுவர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, புகை பிடிக்கின்ற காரணத்தால் தீ விபத்துக்கள் ஏற்படக்கூடும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் திரைப்பட அரங்குகளில் புகை பிடிக்கக்கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பலரும் புகை பிடிக்க ஆரம்பித்தால் சுகாதாரத் தூய்மையும் கெட்டுவிடும். அதை முன்னிட்டுத்தான் சுகாதாரத்திற்கும் ஏற்றவகையில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ரயிலில் பிரயாணம் செய்யும்போது, உடனிருக்கும் பயணிகளின் விருப்பு வெறுப்பை அறிந்து புகைபிடிப்பவர் புகை பிடிக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உடன் இருப்பவர்களின் விருப்பு வெறுப்பை அறிந்துகொள்வது என்பது திரைப்பட அரங்குகளில் முடியாத காரியம். ரயிலில் செல்வதுபோன்ற குறைவான கூட்டம் திரைப்பட அரங்குகளில் இல்லை.

மீன்பிடி துறைமுகங்கள்

* 552 வினு—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது பற்றி தூத்துக்குடியிலுள்ள தெற்குக் கடற்கரை மீனவர்கள் துறைமுகம் அமையவிருக்கும் இடம் பற்றி வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் 1968-லும் 1969-லும் மனுக்கள் அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகத்திற்கென தெரிந்தெடுக்கப்பட்ட இடம் குறித்து மறுப்பு தெரிவித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து 1969-ல் ஒரு முறையீடு வரப்பெற்றது. இந்த முறையீட்டை அரசு நன்கு பரிசீலித்து, தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு மீன்பிடி துறைமுகத்தைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1963-லேயே தயாரிக்கப்பட்டதென்பதாலும், ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்தபிறகு தூத்துக்குடியில் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் மீன்பிடி துறைமுகத்தைக் கட்ட இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதென்பதாலும் இந்த மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான இடத்தை மாற்றுவது குறித்து வினு எதும் எழவில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டும்

பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களை, 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி அன்று சந்தித்து தூத்துக்குடி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரிடமும், உறுப்பினர்களிடமும் மேற்சொன்ன நிலை தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் வினா எண் 553-க்கும் விடை அளித்துவிடலாம்.

THIRU K. VINAYAKAM: These are different questions with different answers. You cannot embarrass the Minister by suggesting the clubbing of the questions. She herself refuses to have them clubbed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் மீன்பிடி துறைமுகம் பற்றியதுதான். அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிடுவார்கள்.

* **553 வினா—திரு. கரு. சிமைச்சாமி:** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை மீன்பிடி துறைமுக திட்டத்துக்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(இ) வேலைத் திட்டத்தின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) சென்னையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய அரசு ரூ. 388·50 லட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(இ) துறைமுகம் கட்டுதல்:—

1. தொடக்கப்பணி—மண்வள ஆய்வு—மாதிரி சோதனை நேரிட அலுவலகம்.
2. நிலம் கையகப்படுத்துதல்.
3. சிறப்பு இயந்திரங்கள், கருவிகளை வாங்குதல்.
4. 10-20 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.
5. 20-30 மட்டக்கோட்டில் அலைத் தடுப்புச் சுவர் கட்டுதல்.
6. இழு படகுக்காக சரக்குத் துறைகளையும் 1,100 அடி நீளம் கொண்ட மீட்புச் சுவர்களையும் கட்டுதல்.
7. இயந்திரப் படகுகளுக்காக ஆழமில்லாத சரக்குத் துறையைக் கட்டுதல்.
8. இழு படகுகள் வந்து தங்குவதற்கான வசதிகளைச் செய்தல்.
9. வடிநிலத்தில் 20 அடிக்கு தூறு எடுத்தல்.
10. நீர்வழிப் போக்குவரத்திற்கான வசதிகளைச் செய்தல்.

கரையோர வசதிகளான சாலைகள், ரயில் பாதைகள், மின்சக்தி, நீர் வழங்குதல் ஆகிய வசதிகளைச் செய்தல்.

இழு படகுகளுக்கான சரக்குப் பாதை பழுது பார்க்கும் வசதிகள் ஆகியவைகளைச் செய்தல்.

கரையோர கட்டிடங்களான, ஏலம் விடும் கூடம், சிப்பங்கட்டும் கூடம், அலுவலகம், சிற்றுண்டிச்சாலை, பண்டகசாலை, ஓய்வுக் கொட்டகைகள், கழிப்பிடங்கள், வேலிகள், வாயில்கள் ஆகியவைகளை அமைத்தல்.

பனிக்கட்டிப் பிரிவு குளிர்ப்பதனப் பிரிவு உறையவைக்கும் பிரிவு, கொள்கலன்களில் அடைக்கும் பிரிவு, மீன் மாவுப் பிரிவு போன்ற சேமிப்புப் பிரிவுகளையும் பதப்படுத்தும் பிரிவுகளையும் ஏற்படுத்தல்.